இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 02.06.2026

# குழந்தைகளை பகடைக்காயாகப் பயன்படுத்தியது...!

‘பேத்தி சொல்லி விசிலுக்கு வோட்டுப் போட்டேன்’, ‘பேரன் சொன்னதற்காக விசிலுக்கு வோட்டுப் போட்டேன்’ என்று சொன்னவர்கள் அனைவரும், ‘இப்பத்தான் ஏன் போட்டேன்னு வருத்தப்படுறேன்’’ என்று வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சமூக வலைதளங்களில் இது போன்ற பேட்டிகளை அதிகம் பார்க்க முடிகிறது. பேரன், பேத்திகளுக்கு நல்லது சொல்லி வளர்க்காமல் அவர்கள் சொன்னார்கள் என்று வாக்களித்துவிட்டு இப்போது வருத்தப்படுவதால் என்ன பயன்?

**அந்த அளவுக்கு குழந்தைகளைத் தூண்டினார் விஜய். தனது இத்தனை ஆண்டு கால சினிமாப் புகழை, முதலீடாகப் போட்டார் விஜய். அவர் கட்சி ஆரம்பித்தது வேண்டுமானால் இரண்டு ஆண்டுக்கு முன்பாக இருக்கலாம். ஆனால், மக்களை மயக்கத் தொடங்கி பல காலம் ஆகிவிட்டது. அந்த சினிமா மயக்கம் தான் அவருக்குப் பலரும் வாக்களிக்கக் காரணம். அதிலும் குறிப்பாக குழந்தைகளை தனது பேச்சில் அதிகமாகத் தூண்டினார்.**

**‘நீங்கள் உங்கள் அப்பா, அம்மாவை வாக்களிக்க வையுங்கள். இந்த ஒரு தடவை எனக்கு வாய்ப்பளிக்கச் சொல்லுங்கள்’ என்று குழந்தைகளைத் தூண்டினார் விஜய். இது மன ரீதியான தாக்குதல் ஆகும். அதுவும் குழந்தைகள் மீது செய்யப்பட்ட தாக்குதல் ஆகும்.**

குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு அது தேர்தலுக்காகக் கேட்கப்படும் வாக்கு என்றே தெரியாது. அவர்களுக்குப் பிடித்த ஒருவர், ஏதோ கேட்கிறார். அதைச் செய்ய வேண்டும் என்பது மட்டுமே அவர்களுக்குப் புரிந்திருக்கும். ‘சக்திமானைப்’ பார்த்து அவர் செய்வது போலவே மாடியில் இருந்து இறந்த சிறுவர்களைப் பார்த்துள்ளோம். அதுபோன்ற பொய்மானைப் பார்த்து சிறுவர், சிறுமியர் செய்த செயலாகவே இதைப் பார்க்க வேண்டி இருக்கிறது.

**‘தேர்தல் பிரச்சாரத்தில் த.வெ.க. சார்பில் குழந்தைகளைப் பயன்படுத்தியது தவறு’ என்று சொல்லி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம் புவனகிரியைச் சேர்ந்த வழக்கறிஞர் வாசுகி, சென்னை உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். “நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய விஜய், குழந்தைகளைத் தூண்டும் வகையில் பேசினார். ‘நீங்கள் உங்கள் பெற்றோரிடமும் அண்ணன், அக்காவிடமும் சொல்லுங்கள்’ என்று சொன்னார். இது தேர்தல் நடத்தை விதி மீறல் ஆகும்” என்று மனுவில் குறிப்பிட்டு இருந்தார். நீதிபதிகள் சுவாமிநாதன், லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.**

த.வெ.க.சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், “வெறும் செய்திகளின் அடிப்படையில் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்” என்று சொல்லி இருக்கிறார். வெறும் செய்திகளின் அடிப்படையில் அல்ல, விஜய் பேசிய பேச்சுகள் ஆதாரமாக உள்ளது. “வீட்டில் இருக்கும் குட்டி நண்பா, நண்பீஸ்... விஜய் மாமாவுக்கு வோட்டுப் போடச் சொல்லுங்கள். உங்கள் பெற்றோரையும் வோட்டுப் போடும் வயதில் இருக்கும் அண்ணா, அக்கா, சித்தி, சித்தப்பா எல்லோரையும் விசில் சின்னத்துக்கு வோட்டுப் போடச் சொல்லுங்க’’ என்று விஜய் பேசிய ஆதாரம் போதாதா?

தேர்தல் முடிந்து முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மேடையிலும் குழந்தைகள், சிறுவர், சிறுமியருக்கு நன்றி சொன்னார் விஜய். இந்த ஆதாரம் போதுமே.

**‘பேத்தி சொன்னதற்காக விசிலுக்கு வோட்டுப் போட்டோம்’, ‘பேரன் சொன்னதற்காக விசிலுக்கு வோட்டுப் போட்டோம்’ என்று சொல்பவர்களின் பேட்டிகள் இணையத்தில் வைரல் ஆகி வருகிறது. எனவே, இது வெறும் செய்திகள் அல்ல. உண்மைகள் என்பதை நிரூபிக்க ஏராளமான ஆதாரங்கள் இருக்கிறது.**

‘குழந்தைகளை தனது அரசியல் சுய லாபத்துக்காகப் பயன்படுத்தியது’ குறித்து ஜூலை 10 ஆம் தேதிக்குள் விஜய் விளக்கம் அளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**“சட்டமன்றத் தேர்தலில் குழந்தைகளை தூண்டிவிட்டு பிரச்சாரம் செய்த விஜய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று வலியுறுத்தி தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.**

தலைமைத் தேர்தல் ஆணையருக்கு மூத்த பத்திரிகையாளர் அரவிந்தாக்சன் எழுதியுள்ள கடிதத்தில், “கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி சென்னை நந்தனத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய த.வெ.க. தலைவர் விஜய், சட்டமன்றத் தேர்தலில் குழந்தைகளைத் தூண்டி விட்டு த.வெ.க.வுக்குப் பிரச்சாரம் செய்தார். த.வெ.க.வுக்கு வாக்களிக்குமாறு தங்கள் பெற்றோர்களையும் உறவினர்களையும் வலியுறுத்த வேண்டும் என, குழந்தைகளுக்கு விஜய் நிர்ப்பந்தித்தார். குழந்தைகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, இந்தப் பிரச்சாரமானது தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளை ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். சமூக ஊடகங்களில் பரவி வரும் ஏராளமான காணொளிகளில், சிறார்கள் அழுதுகொண்டும், கதறிக்கொண்டும், கூச்சலிட்டுக்கொண்டும், அடம் பிடித்துக்கொண்டும் இருப்பது காணப்படுகிறது. இதன்மூலம், அவர்கள் தங்கள் பெற்றோர்களையும் குடும்பத்தில் உள்ள வயது வந்த உறுப்பினர்களையும் த.வெ.க.வுக்கு வாக்களிக்குமாறு நிர்ப்பந்திப்பது தெரிகிறது. தங்கள் கோரிக்கையை பெற்றோர்கள் நிறைவேற்றாவிட்டால், குழந்தைகள் சாப்பிடக் கூட மறுப்பதாகவும், மேலும், குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை மிரட்டுவது போன்ற காட்சிகள் சமூக வலைதளங்களில் இடம் பெற்றுள்ளது. எனவே, சட்டமன்றத் தேர்தலில் குழந்தைகளைத் தூண்டிவிட்டு பிரச்சாரம் செய்த விஜய் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்.

**தேர்தல் பணிகளில் குழந்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று 2024 நாடாளுமன்றத் தேர்தலின் போது கடுமையான கட்டுப்பாடுகளை தேர்தல் ஆணையம் விதித்திருந்தது. விஜய் மீது தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ளது.**

**விஜய்யின் பேச்சு சென்னை உயர்நீதிமன்றம், தேர்தல் ஆணையம், தேசிய குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் ஆகிய மூன்றின் விசாரணையிலும் உள்ளது.**

குழந்தைகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, விஜய்யின் பிரச்சாரமானது தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் கடுமையாகத் தடை செய்யப்பட்ட முறை ஆகும். குழந்தைகளை ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். தேர்தல் நடவடிக்கைகளில் குழந்தைகள் மீது செல்வாக்குச் செலுத்தியது தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

**குழந்தைகளைக் கட்டாயப்படுத்துவது என்பது பிஞ்சு மனங்களின் மீது நடத்தப்பட்ட அரசியல் அச்சுறுத்தல், வன்முறை ஆகும்.**

---

## திருவண்ணாமலை தெற்கு – வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# நலஉதவிகளுடன் வருடம் முழுவதும் கலைஞர் பிறந்த நாள் விழா!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, ஜூன் 2 -

ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளையொட்டி, மக்களுக்கு தேவையான நலஉதவிகளுடன் நடத்திடுவீர் என்று திருவண்ணாமலை மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டு வளர்ச்சியுமே வாழ்நாள் செயல்திட்டமாக கொண்ட ஓய்வில்லா சூரியன், தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு சொந்தகாரர்.

ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில், முக்கால் நூற்றாண்டு கால பங்களிப்பாளர். அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக இருந்து, தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர்.

இந்திய ஜனநாயக காவலராக திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர். இலக்கியம், கவிதை, இதழியல், நாடகம் மற்றும் திரைப்படம் என தொட்டத் துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முக திறன் கொண்ட படைப்பாளர்.

திருக்குவளையில் பிறந்து திருவாரூரில் வளர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளை கழக நிர்வாகிகளும், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகளும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை, மரம் நடுதல், இரத்த தானம் செய்தல், நீர் நிலைகளை செப்பனிடுதல், ஜூன் 3 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், கழக கொடியேற்றுதல், இனிப்பு வழங்குதல் மற்றும் பொதுமக்களுக்கு உதவும் வகையில் நல உதவிகளுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை ஆண்டு முழுவதும் எழுச்சியாக கொண்டாடிட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டப் பொறுப்பாளர் பாளை மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

நெல்லை, ஜூன் 2 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் சுயமரியாதையை, சமூக நீதியை ஊட்டி வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாளை ( 03.06. 2026 - புதன்கிழமை) மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

இதில் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-



கல்வியிலும் பொருளாதாரத்திலும் தமிழ்நாடு முதல் மாநிலமாய் திகழ்ந்திட நல்லாட்சி வழங்கிய நலத்திட்ட நாயகர் நமது நெஞ்சம் நிறைந்த கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி, சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோரின் வழி காட்டுதலின் படி கணினி அறிவியலில் உலகின் முதன் மாநிலமாய் உயர்ந்திட அடித்தளமிட்ட நவீன தமிழகத்தின் சிற்பி, சுயமரியாதையையும், சமூக நீதியையும் ஊட்டி வளர்த்த முத்தமிழறிஞர், கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, நாளை (03.06.2026) காலை 10.00 மணிக்கு,நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில், தலைவர் கலைஞர் அவர்களின் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப்படத் திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகின்றது.

நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கழக நிர்வாகிகள் அந்தந்த பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டும். தொடர்ந்து ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், இரத்த தானம், மருத்துவ முகாம் போன்ற சிறப்பு முகாம்களையும் நடத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## நெல்லை கிழக்கு மாவட்டம் முழுவதும் ஏழை – எளிய மக்கள் விழாவாக வெகு சிறப்பாகக் கொண்டாட வேண்டும்!

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வேண்டுகோள்!



நெல்லை, ஜூன் 2 -

நெல்லை கிழக்கு மாவட்டம் முழுவதும் நாளை (03.06.2026 - புதன்கிழமை) தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நெல்லை கிழக்கு மாவட்டம் முழுவதும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என நெல்லை கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நெல்லை கிழக்கு மாவட்டத்தில் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை நாளை (03.06 .2026 - புதன்கிழமை) ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடும் பட வேண்டும்.

மேலும் நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை பகுதிகளில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கிட வேண்டும்.

ஏழை,எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டும்.


ஆகவே மாவட்டம் முழுவதும் நடைபெற உள்ள இந்நிகழ்வுகளில் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், அந்தந்த பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடிட வேண்டும்.

நிகழ்வுகளில் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வேண்டுகோள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# வள்ளுவரை வாழ விடுங்கள்!



ஆளுநர் குடியிருக்கும்
மக்கள் மாளிகைக்குச்
சில கேள்விகள்

திருவள்ளுவர்
காற்றைப்போல் பொதுவானவர்;
காற்றுக்கு ஏன்
காவிப் பூச்சு?

திருவள்ளுவர்
மானுடத்தின் பொதுச்சொத்து

‘வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து’
என்று பாரதியால்
பொதுமைப்படுத்தப்பட்ட
புலவனுக்கு
திருநீறு என்ற
உள்ளூர் அடையாளம் எதற்கு?

தர்மார்த்த காம மோட்சம் என்ற
நாற்பொருளிலிருந்து விடுபட்டு
அறம் பொருள் இன்பம் என்ற
முப்பொருளை மட்டுமே
முன்னிறுத்தியவனுக்கு
உருத்திராட்சம் என்ற
உருட்டுமாலை தேவையா?

அண்டமெங்கும் விரிந்திருக்கும்
ஆகாயம் என்று
கருதப்படும் வள்ளுவரை
மதம் என்ற
சின்னச் சிமிழுக்குள் அடக்குவது
வரலாற்றின் வழு இல்லையா?

மெய்த் தமிழர்கள்
மீண்டும் மீண்டும்
எதிர்த்துக்கொண்டிருக்க
ஆளுநர்கள் மீண்டும் மீண்டும்
அதே செயலைச் செய்வது
உங்கள் அதிகாரத்தால்
எங்களைக் காயப்படுத்துவது
ஆகாதா?

அன்புகூர்ந்து
நிறுத்திக்கொள்ளுங்கள்;
தாங்கமாட்டார்கள்
தமிழர்கள்

வள்ளுவரை
வாழ விடுங்கள்



கவிப்பேரரசு
**வைரமுத்து**